**அம்பலாந்தோட்டை பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 10 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட 03 மூலதன செயற்தட்டங்களுக்கான செலவுகள் ரூபா 3,622,653 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சொத்துக்களை மூலதனப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான 05 வாகனங்களின் கூட்டுப் பெறுமதி ஆகிய ரூபா 2,237,750 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சொத்துக்களை சரியாக பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | தென் மாகாண முதலமைச்சினால் சபைக்கு உரித்தாக்கப்பட்ட லொறி நீர்பவுசரின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 13,146,650 தொகைக்கான மீதிகள், அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 2,299,264 தொகைக்கான சமமின்மைகள் காணப்பட்டது. | கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் தொடர்பான துணைப் பதிவேடுகள் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வீதவரி மற்றும் முதலீட்டுக் கணக்கில் காணப்பட்ட சமமின்மைகள் 2020 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 78,810,763 தொகைக்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2016 ஆண்டின் ஆரம்ப மீதி தொடர்பாக அட்டவணைகள் தயாரித்திருக்காததுடன், வைப்புக்கள் தொடர்பாக கண்டறிவதற்காக நடவடிக்கை எடுப்பதுடன், அளவை அறிக்கைகள் மற்றும் இறுதி சிட்டைகள் தயாரித்திருக்காத துடன் மற்றும் 2020 ஆண்டின் இறுதிக் கணக்குகளுடன் அட்டவணைகள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(2) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந் துள்ள முன்னேற்றப்பட வேண்டிய பிரதேசங்களை உரிய காலத்தில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்டத்தின் பிரிவு 134(2) இன் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை அறுதியாக இனங்காண்பதற்கு சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி<br>---------------------------------- | | | |
| (i) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களுக்கான மிகைகள் மற்றும் பற்றாக் குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்று தயாரித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இந்தக் குறைபாட்டை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) விதி 33 | வீதவரி செலுத்தாத நபர்கள் தொடர்பாக அட்டவணை ஒன்று வருடாந்தம் தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வீதவரி நிலுவையாக காணப்படும் ஆதன உரிமையாளர்களுக்கு ஆதனங்களை தடை செய்யும் சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு 14 நாட்களுக்குள் நிலுவை வீதவரி தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>----------------------------------- | | | |
| i. நி.பி. 571 | இரண்டு வருடங்களை விஞ்சியுள்ள ரூபா 621,673 தொகைக்கான வைப்புக் களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிதிப் பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். | இந்த வைப்புக்களில் ரூபா 338,571 தொகை இது வரை தீர்க்கப்பட்டுள்ளதுடன், மீதியான வைப்பு மீதிகள் எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன். |
| ii. நி.பி. 702(3) | ஒப்பந்தங்கள் தொடர்பாக கையொப்பமிடப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| iii. நி.பி. 1645 (அ), (இ) மற்றும் 1646 | சபையின் 24 வாகனங் களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் நாளாந்த பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்பித்த போதிலும், மீதியான 24 வாகனங்களின் ஓட்ட அட்டவணைகளை விரைவாக சமர்ப்பிப்பேன். |

(ஈ) ஏனைய சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| i. | 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/ பபாகொ/2010/01 இலக்கங் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி மற்றும் 06 ஆம் பந்தி | சபைக்குச் சொந்தமான 26 கடைகளின் உடன்படிக்கைகள் மற்றும் 12 கடைகளின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதிகளை நாளது வரை ஆக்கியிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 12 கடைகளுக்கான உடன்படிக்கை கையொப்பம் இடுவதற்காக அழைத்த போதிலும், 2019 ஆண்டின் போது உடன்படிக்கைகளை கையொப்பமிடுவதற்கு வந்திருக்காததுடன், எதிர்காலத்தில் அந்த உடன்படிக்கைகளை கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| ii. | 2015 அக்தோபர் 09 திகதிய PED/REG/2015/08 பொது (i) இலக்கங் கொண்ட பொது நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பந்திகள் 4.3(ஆ), (உ) | மூன்று ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 178,914 பெறுமதியான கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கடனை அறவீடு செய்வது தொடர்பாக தென் மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்தின் சட்டப் பிரிவின் ஆலோசனை பெறுவதற்கு கடிதங்கள் சமர்ப்பிக்கின்றேன். |
| iii. | 2020 ஜனவரி 30 திகதிய இலக்கம் PFD/RED/COPA/ 2019/01 கொண்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பந்தி 04 | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்திருக்கவில்லை. | செயலாற்றல் அறிக்கை வருடாந்தம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்தம் செயலாற்றல் அறிக்கை ஒன்று தயாரித்து சமர்ப்பிப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,866,768 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,329,171 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் முன்னேற்றம் ரூபா 1,537,597 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,184,100 | 5,239,504 | 3,221,316 | 3,883,984 | 4,910,100 | 4,632,546 | 3,409,957 | 4,008,274 |
| வாடகை | 16,870,100 | 16,065,589 | 14,665,682 | 3,541,738 | 16,723,700 | 15,764,400 | 15,207,683 | 3,455,208 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,604,000 | 2,771,871 | 2,391,481 | 381,390 | 2,531,300 | 2,608,934 | 2,476,934 | 233,280 |
| ஏனைய வருமானங்கள் | 28,635,900 | 26,365,074 | 8,544,725 | 36,309,106 | 86,315,300 | 82,248,941 | 67,152,044 | 26,806,049 |
| மொத்தம் | 53,294,100 | 50,442,038 | 28,813,204 | 44,116,218 | 110,480,400 | 105,254,821 | 88,246,618 | 34,502,811 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 6,223 வீதவரி அலகுகளில் இருந்து பெற வேண்டியிருந்த வீதவரி ரூபா 3,470,998 தொகை காணப்பட்டதுடன், சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் அம் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் நிலுவை மீதிகளில் ரூபா 5,000 இற்கு மிகையான பெறுமதியுடைய 46 வரி அலகுகளில் இருந்து ரூபா 1,110,437 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், நிலுவையாக இருந்த காலவீச்சு 03 இற்கும் 105 காலாண்டிற்கும் இடைப்பட்டதாக இருந்தது. | நிலுவை வருமானம் சேகரிப்பதின் முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 07 வரி அலகுகள் அரசாங்க ஆதனங்களாக காணப்பட்டதுடன், அந்த நிறுவனங்களுக்கு நிலுவை வரியை செலுத்தும் படி பல சந்தர்ப்பங்களில் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்ட துடன், ஏனைய நிலுவைகளை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வீதவரி ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2011 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் மீது மீளாய்வாண்டிலும் வரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | வீதவரி பெறுமதி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட வேண்டும். | வீதவரி திருத்தங்களை மேற்கொண்டு தருமாறு 08 சந்தர்ப்பங்களில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், ஹம்பாந்தோட்டை மாவட்ட பெறுமதி மதிப்பீட்டு அலுவலகத்தினால் கூடிய விரைவில் அந்த அலுவல்கள் ஆரம்பிப்பதாக அறிவித்துள்ளார்கள். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 106 வர்த்தக அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய வியாபார வரி ரூபா 225,000 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் 79 வர்த்தக நிலையங்களில் இருந்து ரூபா 147,650 தொகை அறவிடப்பட்டதுடன் 12 வர்த்தக நிலையங்கள் தொடர்பாக நீதிமன்ற செயற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டதுடன், மீதியான 11 வர்த்தக நிலையங்கள் மீது நீதிமன்ற சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளேன். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 250 கடையறைகள் மற்றும் நிலத் துண்டுகளில் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 54,265 தொகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் நிலுவையாக இருந்த காலவீச்சு 6 மாதங்களுக்கும் 33 இற்கும் இடைப்பட்டதாக இருந்தது. | நிலுவை வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகையில் ரூபா 6,470 தொகை அறவிடப்பட்டதுடன், மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தை, வாராந்த சந்தை மற்றும் ஏனைய டென்டர்களின் மூலம் வழங்கப்படும் 10 ஆதனங்களில் இருந்து பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 399,860 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையில் ரூபா 233,105 தொகை அறவிடப்பட்டதுடன், ரூபா 23,585 தொகை பயங்கரவாத நடவடிக்கை காரணமான பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப் பட்டுள்ளதுடன், மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 இயந்திர உபகரண வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான பெக்கோ லேடர் இயந்திரம் மற்றும் சாக்கடை பவுசர் சேவை வழங்குவதன் மூலம் பெற வேண்டிய ரூபா 167,200 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையில் ரூபா 110,500 தொகை அறவிடப்பட்டதுடன், மீதியை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 5,599,268 தொகை மற்றும் ரூபா 11,983,947 தொகை காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது வரை ரூபா 3,500,000 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 30 பிரதான விடயங்கள் நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவில் 07 விடயங்களுக்கு மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | துணை விதிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் துணை விதிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் கள் மற்றும் இலக்குகளை அறவீடு செய்வதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவை செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் போது அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளை நெருங்குவதற்காக 06 கருமங்கள் மேற்கொள்ளப் பட்டதெனவும் நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்டகால திட்டம் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்கின்றேன். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் 03 சேமிப்புக் கணக்குகளில் கூட்டுத்தொகை ரூபா 1,772,281 தொகை காணப்பட்டதுடன், அந்தப் பணத்தை ஆக்கபூர்வமான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சேமிப்புக் கணக்குளில் காணப்படும் பணத்தை பொருத்தமான விதத்தில் முதலீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சேமிப்புக் கணக்குகளில் காணப்படும் பணத்தை ஆக்கபூர்வமான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 13 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் 03 மிகைகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் மிகைகளை முறைப்படுத்துவதற்கும் மற்றும் வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 13 வெற்றிடங்களில் 06 பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் பிரகாரம் சிரேஷ்ட மற்றும் இரண்டாம் தர பதவிகள் ஆகும். அப் பதவிகளுக்கான நியமன அதிகாரம் சபைக்குக் காணப்படாமையால், ஏனைய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரதியீட்டு கணனி தரவு இயக்குனர்கள் இருவர் III தர பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு 05 வருடங்கள் கழிந்துள்ள போதிலும், முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் மூலம் அப் பதவிகளுக்கான அங்கீகாரத் தினைப் பெற்றிருக்கவில்லை. | நியமனங்கள் மேற் கொள்வதற்குரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். | இதற்காக தென் மாகாண பிரதான செயலாளரின் CSS/2/7/1/Carder IX மற்றும் 2019 ஜூலை 19 திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துக்காக அனுப்பப் பட்டுள்ளது. |
| (இ) | 2018 ஜனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் மனிதவள முகாமைத்துவ திட்டம் ஒன்று மீளாய்வாண்டிற்காக தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடு களின் பிரகாரம் உரிய உடன்படிக்கை கள் மற்றும் திட்டங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டிற்கான மனித வள திட்டம் ஒன்று தயாரித்திருக்காததுடன், 2020 ஆண்டிற்கான மனிதவள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 வாகனப் பராமரிப்பு மற்றும் திருத்த வேலை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 04 வாகனங்கள் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களை திருத்துவதற்காக அல்லது அப்புறப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓட்ட நிலையில் இருந்து அகற்றப் பட்ட வாகனங் களை திருத்து வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டின் மூலம் இந்த வாகனத்தை விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டி ருந்ததுடன், மாகாண இயந்திர பொறியியலாளரை அறிவுறுத்தி தொடர் நடவடிக்கை மேற்கொள்வேன். |

#### 3.4.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் சபையின் அலுவல்களுக்காக பயன்படுத்தப் பட்டு வந்த 07 வாகனங்கள், 12 காணிகள் மற்றும் 73 கட்டிடங்களின் சட்ட ரீதியான உரிமையை மீளாய்வாண்டு இறுதி வரை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி மற்றும் கட்டிடங்களை சபைக்கு உரித்தாக்கித் தரும்படி அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு அறிவித்திருந்த போதிலும் இது வரை நிறைவேற்றப்படாததுடன், 07 வாகனங்களின் உரிமையை எதிர்காலத்தில் உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4.3 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான கூட்டுத்தொகை ரூபா 145,930 தொகைக்கான குழாய்கிணறு களஞ்சிய உபகரணங்கள் மற்றும் நீர் செயற்திட்ட உதவி உபகரணங்கள் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | சபைக்குச் சொந்தமான உபகரணங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பண்டங்கள் தொடர்பாக அடுத்த வருடம் பண்டக் கணிப்பீட்டு சபை தீர்மானத்தின் மீது நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2006 ஆண்டின் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டிற்கான முறையான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகை திட்டம் தயாரிக்கும் போது அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் படி தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.2 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை நிதியத்தில் இருந்து நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டிருந்த 03 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், ரூபா 1,200,000 இற்கான அங்கீகரிக்கப்பட்டிருந்த அம்பலாந்தோட்டை வளவை ஆற்றில் சுற்றுலா வள்ளப்போக்குவரத்து நிலையத்தின் ஒப்பந்த வேலைக்காக உடன்படிக்கை கையொப்பம் இட்டிருக்கவில்லை. | ஆண்டிற்கான அபிவிருத்தி அலுவல்கள் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்மாண வேலைகள் தாமதம் ஆவதற்கு காரணம் மிகை மழை மற்றும் சந்தையில் தார் கொள்வனவு செய்ய முடியாமல் இருந்தமை, வளவே ஆறு சுற்றுலா வள்ள செயற் திட்டத்திற்காக மதிப்பீடுகள் தொடர்புடைய விலைப் பகுப்பாய்விற்காக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் அங்கீகாரம் கிடைப்பதில் தாமதம் ஏற்படல், டிபோவத்த காணியில் இந்த செயற்திட்டத்தை செயற் படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் அங்கீகாரம் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் இந்த நிர்மாண வேலைக்காக உடன்படிக்கை மேற்கொள்வதற்கு முடியாமல் போனது என அறிவிக்கின்றேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் சபை முதல்வரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு இணங்க கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளாமல் பொதுக் களஞ்சிய பரிசோதனை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உள்ளகக் கணக்காய்வு திட்டத்திற்கு அமைவாக செயற்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்காமையை ஏற்றுக்கொள்வதுடன், 2020 ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் 2019 திசெம்பர் 10 திகதி சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபையின் உள்ளகக் கணக்காய்வாளருக்கு கணக்காய்விற்கு தொடர்பில்லாத வேறு விடயங்கள் சாட்டுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உள்ளகக் கணக்காய்வு கடமைகள் மாத்திரம் சாட்டப்பட வேண்டும். | 2019 ஆண்டில் 04 உத்தியோகத்தர்களின் வெற்றிடம் மற்றும் மகப்பேற்று விடுமுறை பெற்றிருந்த இரண்டு உத்தியோகத்தர்கள் இருந்தமையால் வேறு கடமைகள் சாட்டுவதற்கு நேரிட்டிருந்தது. |
| (இ) | மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அவ் அறிக்கைகளை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பேன். |